Registered as a News Peper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

PEOPLES DAILY

மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 01 (18 - 10 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 242

## இந்தியச் செய்தியாளரை வெளியேற சிறிலங்கா பணிப்பு

(கொழும்பு)

இந்திய வானொலிக் கொழும்புச் செய்தியாளர் ஏ. கறுப்புசாமியை நாட்டைவிட்டு வெளியேறும்படி சிறிலங்கா அரசு உத்தரவிட்டுள்ளது. சபாநாயகர் எம். எச். முகமட் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார் என்று கறுப்புச்சாமியை மேற்கோள்காட்டி இந்திய வானொலியும் தூரதர்ஷனும் தவறானசெய்தி வெளியிட்டிருந்தமைதெரிந்ததே கடந்த செவ்வாயன்று வெளிவந்த இச் செய்தி தொடர்பாக குடிவரவுத் திணைக்களம் மற்றும் தகவல் தொடர்பு ஆணையாளர் ஆகியோரால் கறுப்புசாமியை (4 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்கு தொடுவாயில் 30 படையினர் பலி

## எழுபத்தைந்துக்குமேல் காயம்

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று அதிகாரிகள் உட்பட முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எழுபத்தைந்திற்கும் அதிகமான இராணுவத்தினர் படுகாயமடைந்தனர், பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இம்மோதலில் புலிகள் தரப்பில் மேஜர் டிசான் உட்பட பன்னிரண்டு புலிகள் வீரமரணமடைந்தனர்.

மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கிளாய் இராணுவ முகாமில் இருந்து கொக்குத்தொடுவாய் நோக்கி விமானப்படையின் உதவியுடன் முன்னேறி வந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழி மறித்து தாக்கியபோதே இம்மோதல் இடம்பெற்றது.

இம் மோதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா புலிகளுடன் ஏற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ. கே. எல். எம். ஜிகள் உட்பட

## யா. மாவட்டத்தில் ஊரடங்கு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று காலை ஐந்து மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படுவதாக பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டுத் தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது.

## பலாலியில் போதி பூஜை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பலாலி இராணுவ முகாமில் பாதுகாப்பு படையினருக்கு ஆசிவேண்டி விசேட போதி பூஜை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காயமடைந்த பயணிகளுக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

கடந்த [illegible] இடம்பெற்ற ரயில் விபத்தில் காயமுற்ற பயணிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை

# 2 லட்சம் வடமராட்சி மக்கள் வெளியேற்றம்

## யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் இருந்து சுமார் இரண்டு லட்சம் மக்கள் இரவோடு இரவாக வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளதாக யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் நேற்றிரவு தெரிவித்தார், வடமராட்சியில் கோயில், தேவாலயங்களில் தங்கியிருக்குமாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்ததைத் தொடர்ந்து, இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சியே மக்கள் இப் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா இராணுவத்தினர் வடமராட்சி பகுதி மக்களை நேற்று நண்பகலிற்கு முன் அப்பகுதிகளை விட்டு வெளியேறுமாறு விடுத்த அறிவித்தலைத் தொடர்ந்து மருதங்கேணி, கரவெட்டி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து நேற்று மாலை வரை இரண்டு இலட்சம் மக்கள் வெளியேறியுள்ளனர்.

இரவோடிரவாக சைக்கிள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்க வேண்டாம்

## நவீன ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல மணி நேரம் நடைபெற்ற உக்கிர மோதலில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ.கே எல்.எம் ஜி - 03
இதற்குரிய மகஸீன் - 03
★ ரி56-2 ரகத்துப்பாக்கி - 08
இதற்குரிய மகஸீன் - 07
★ ரி56-1 ரகத்துப்பாக்கி - 01
★ ரி 56 ரகத்துப்பாக்கி - 01
★ ஜே.ஆர் கைக்குண்டு - 02
★ புகைக்குண்டு - 01
★ ஐ. எம் ரவை - 454

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மேஜர் டிசான் உட்பட 12 புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம்(16-10-91) அன்று நடைபெற்ற மோதலில் பன்னிரண்டு புலிகள் வீரமரணமடைந்தனர் இவர்களின் விபரம் வருமாறு:

★ மேஜர். டிசான் - (கந்தப்பொடி இலங்கநாதன் ஏறாவூர்),
★ 2ம் லெப். கோபி (கனகரட்ணம் சிவகுமார், மானிப்பாய் மேற்கு).
★ 2ம் லெப். காந்தி (செல்லத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் பலத்த விமானக்குண்டு வீச்சு

(நமதுநிருபர்)

மணலாறு மாவட்டத்தில் நேற்று முழுவதும் தொடர்ச்சியான விமான குண்டுவீச்சு நடைபெறுவதாகவும் இதனால் பல பொதுமக்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 6 மணி முதல் கொக்குத்தொடுவாய், நாயாறு பகுதிகளில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத் வீச்சுத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வருகின்றன இதே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு இராணுவத்தினர் இருவர் காலை இழந்தனர் இருவர் கொல்லப்பட்டனர்

ஆனையிறவு பிரதான வீதி காவலரணிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினரில் இருவர் கால்களை இழந்தனர் முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 7 45 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ காவலரணில் இருந்து வெளியேறிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கபுராவில் மோதல் இரு இராணுவம் பலி

(சிங்கபுர)

சிங்கபுரமுகாமிலிருந்து இரு ஜீப்களில் வந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் சில இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன

கடந்த 16ம் திகதி சிங்கபுர சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெலிகந்த இராணுவ முகாமை நோக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்த நடவடிக்கைகளை பதில் போக்குவரத்து அமைச்சர் மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்றத்தில் 12 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம்

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அடுத்த மாதம் 12 ஆம் திகதி பிரதமரும் நிதி அமைச்சருமாகிய டி.பி. விஜேதுங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

இது குறித்த விபரங்கள் சென்ற 11 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது தெரிந்ததே.

## வீரவணக்கம்

### யோகா

ஆனையிறவுப் பகுதியில் 04-08-91 அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யோகா (கருப்பையா யசோதாதேவி மூதூர் திருமலை) 16-10-91ல் வீரமரணமடைந்தார். இவருக்குப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## · கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரண நடவடிக்கை எதையும் தாம் அறிவிக்கும்வரை எடுக்க வேண்டாமென கொழும்பில் இருந்து சிறிலங்கா அரசாங்க உயர் அதிகாரிகள் யாழ் அரச அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறிய வண்ணம் இருப்பதாகவும் இவர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் உணவு, சுகாதார வசதிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருப்ப

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அ. சார்பற்ற நிறுவனங்கள் உடன் உதவி வழங்கும்

(நமதுநிருபர்)

வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து பல பகுதிகளிலும் தங்கியுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு மூன்று நாட்களுக்கு தேவையான உணவை வழங்க யாழ் மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன

அதன் பின் தொடர்ந்து ஒருவாரத்திற்கு தேவையான உணவை யாழ் செயலகம் வழங்கும் என அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மேற்படி உடனடிநிவாரண நடவடிக்கைகள் பற்றிய தீர்மானம் நேற்று நண்பகல் யாழ். செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட். நேற்று மாலை விமானக் குண்டுவீச்சு

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியிலும், வலிகாமம் வடகிழக்குப்பகுதிகளிலும் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுமாலை முதல் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுவருகின்றன.

நேற்றுமாலை 3 மணிக்கும் மாலை 6 மணிக்குமாக இரு தடவைகளில் வல்வெட்டித்துறை. தொண்டமனாறு. பருத்தித்துறை. துறைமுகம், வளலாய் ஆகிய பகுதிகளில் வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இப்பகுதிகளில் ஏழுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசின இதனால் இரு பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

## சிறிலங்கா கடற்படை 8 மீனவரைக்கடலில்வீசியது

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைக் கைது செய்த சிறிலங்கா கடற்படையினர் அவர்களைத் தாக்கி பின்னர் கடலுக்குள் தூக்கி வீசினர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் மாதகல் கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த எட்டு மீனவர்களை பீரங்கிப் படகில் வந்த சிறிலங்கா கடற்படையினர் கைதுசெய்து தமது படகிற்குள் ஏற்றினர் பின் எட்டு மீனவர்களும் கடற்படையினரால் நையப் புடைக்கப்பட்ட பின்னர் சேந்தான் குளப் பகுதியில் தூக்கி வீசப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதில் பாதுகாப்பு அமைச்சர் வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜேன் அமரதுங்கா நேற்று யாழ்ப்பாண விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவர் பல்வேறு இராணுவ முகாம்களுக்கும் விஜயம்மேற்கொண்டிருந்ததுடன், இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனைகளையும் நடத்தியுள்ளார். பலாலி இராணுவமுகாம், காரைநகர் கடற்படைத் தளம், ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சருடன் ஏயார் சீப் மார்சல் வால்டர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தடை

(கொழும்பு)

லலித், காமினி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்களின் அரசாங்கக் கூட்டத்திலோ அல்லது அரசியல் நடவடிக்கைகளிலோ ஐ தே க, உறுப்பினர்கள் பங்கு கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

தாவரவியல்
ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்

கந்தர்மடம் ——— யாழ்ப்பாணம்



## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

**(BECON)**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**AL 93**

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. வரதராஜன் |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | பிரபல ஆசிரியர் |
| கணக்கியல்:— | திரு. மரியதாஸ் |
| | திரு. யோகராஜா |
| | திரு. சௌந்தி |
| தமிழ்:- | திருமதி மீரா |
| இந்துநாகரிகம்:- | திருமதி அருள்நங்கை |
| சரித்திரம்:- | செல்வி நாகராணி |
| புவியியல்:- | திரு. ஜோசப் |
| அரசியல்:- | திரு. செல்வா |

**ஆரம்பம்:- 19-10-91 சனி 7.00 மணி**

- கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கும் நிறுவனம்.
- முதல் அனுமதி பெறும் 100 மாணவர்கள் மட்டுமே, வகுப்புகளுக்கு அனுமதிக்கப் படுவர்.

(B/3271)



யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்


## வரி விளம்பரம்


**A/L இரசாயனம்**

A/L 93 இரசாயனம் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 19 சனி 6 30 AM மாலை வகுப்பு 3 P M. கிழமைநாள் வகுப்பு ஆரம்பம் 21 திங்கள் 4.30 P M. திங்கள். புதன் 4 30 P M ஆசிரியர் சதீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (R/1848)

**தவறிவிட்டது**

பழைய பூங்கா வீதிக்கும் நெடுங்குளம் சந்திக்கும் இடையில் நாடகத் திரை (சீன்ஸ்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 96, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (R/1853)



### Dr. Arunasalam Sivapathasundaram
## Memorial Lecture

The Faculty Board of the Faculty of Medicine University of Jaffna has decided to invite applications to deliver a Lecture in memory of Dr. Arunasalam Sivapathasundaram, Consultant Paediatrician, General Hospital Jaffna (Teaching), who was shot by the Indian Peace Keeping Forces on 22-10-1987 while on duty.

The Lecture shall be based on the profound study of topics related to Medicine and of interest to the Medical Students and Practitioners of Medicine.

THE LECTURE SHALL BE DELIVERED ON

29th OF NOVEMBER 1991 AT 3.30 P. M. in Kailasapathy Auditorium, University of Jaffna

The Abstract should be sent to the Dean, Faculty of Medicine University of Jaffna on or before 8th of November 1991

The selected applicant shall submit the lecture on or before 15th of November 1991.

Prof K. Balasubramaniam,
Dean/Faculty of Medicine,

Dean's Office,
Faculty of Medicine,
10 October 1991.
KB/st

(B/3340)


## 90-ம் நாள் நினைவஞ்சலி

பெற்றதாய் மடியில் 04.01.1976



ஈழத்தாய் மடியில் 21.07.1991


ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 18







ஹென்ரி லெப். ரகீம் ரசீக்

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் முனைக்காட்டில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

குகன் (வைரமுத்து கிருபாகரன் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை)

கோப்பாயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

அலன் (சிதம்பரநாதன் நிசாந்தன் - திருநெல்வேலி)

நோயல் (பியதாஸ சுகந்தன் - சின்னப்பண்டிவிரிச்சான்)

இருபாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

விக்ரர் (ஆறுமுகம் தவராசா - கோண்டாவில் கிழக்கு)

யாழ். மணியந்தோட்டத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

அன்ரனி (தர்மகுலசிங்கம் - ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

மோகன் (அருணாசலம் ஜெகநாதன் - கிளிநொச்சி)

கந்தபுரத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

மோகன் (லிங்கலிங்கம் சிவலிங்கநாதன் - 2 ஆம் யூனிற், வவுனிக்குளம்)

சுமித் (சண்முகம் - நெடுங்கேணி)

கமீத் (முத்தன் ஜெகசோதி - அச்சுவேலி தெற்கு)

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சி களும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203]

ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை கபிலன்
## (மார்க்கண்டு குகமூர்த்தி)

அந்திரான் முருகன் தந்த
எம் இதயச் செல்வமே! உன்னைக்
கண்ணைக் காத்து ஊட்டி
வளர்த்தோம் நீயோ தாய் மண்
காத்திட உயிர் கொடுத்து
சரித்திரமானாய்
தமிழ் மக்கள் உள்ள வரை அஞ்சலிக்
குரியவனாய் அவர்களின்
இதயங்களிலே ஒளிர்வாய்!

உன் ஆத்மா சாந்தி பெற அருளை வேண்டுகின்றோம்

நவாலி தெற்கு — தந்தை, தாய்
மானிப்பாய் — உடன் பிறப்புகள், சுற்றத்தார்.

(B/3345)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**93 ஆரம்பம்: 19.10.91 8.00 மணி**

எமது தனித்துவமான ஆசிரியர் குழு

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | : திரு. க. கலாகரன் | இந்து நாகரிகம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| வர்த்தகம் | : திரு. தேவா | இந்துசமயம் | (திரு. காரை சுந்தரம்பிள்ளை) |
| கணக்கியல் | : திரு. வன்னியசிங்கம் | தமிழ் | : திரு. குழந்தை |
| அளவையியல் | : திரு. சுப்பிரமணியம் | புவியியல் | : திரு. குணராசா |
| சரித்திரம் | : திரு. விஜயன் | அரசியல் | : திரு. சீலன் |

குறிப்பு:

★ அனுமதிகளை முன்கூட்டிப் பெறவும். முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு O/L இலவச விசேஷ வகுப்புக்களும் நடத்தப்படும்.

(B/3262)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன வற்றை ஒன்றிணைத்து பிராந்திய சமாசம் அமைக்கும் முகமாக அதன் அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். உதவி அரசாங்கஅதிபர் தலைமையில் யாழ். உ. அ. அ. பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தைப் பிரதிநிதிப் படுத்து முகமாக சங்கங்களைச் சேர்ந்த இரு பிரதிநிதிகளை (தலைவர், செயலாளர் ஆகியோர்) இக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி யாழ் கிராமஅபிவிருத்திஉத்தியோகத்தர் திரு. செ.செல்வரெத்தினம் கேட்டுக் கொள்கின்றார். (24)

கமீத் (முத்தன் ஜெகசோதி - அச்சுவேலி தெற்கு)

கொக்குவிலில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமெய்திய

**ஹென்றி** (பற்றிக்எக்மோர் அன்ரன்றொபேட் - குருநகர், யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் சின்னத்துரை சற்குணராசா (ராஜன் குளிர்பான நிலையம், மானிப்பாய்)

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் 2ஆவது தடவாக சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒபரேசன் ஜெயசக்தி நடவடிக்கையின் போது பலாலியில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். தமிழ்ச்செல்வன்** (சவிரிப்பிள்ளை வசந்தன் அலோசியஸ் - மாவிட்டபுரம், மருதங்கேணி)

**நெல்சன்** (வடிவேலு சிறி - செல்வபுரம், பூநகரி)

**2ஆம் லெப். சுகந்தன்** (சின்னத்தம்பி - சிவயோகநாதன் வளை)

**சுகந்தன்** (சிவனேந்திரராசா - முல்லைத்தீவு)

**கப்டன் கந்தையா** (கந்தசாமி - உதயகுமார் கரணவாய் தெற்கு, கரவெட்டி)

**லெப். மரியதாஸ்** (பாலச்சந்திரமூர்த்தி - காந்திகான் 'அமெரிக்கன் பாட சாலை வீதி, வல்வெட்டித்துறை)

**ஜெனி** (சின்னப்பொடியன் - ஜெகதீஸ்வரன் கைதடி மேற்கு)

**தாஸன்** (கந்தசாமி சர்வானந்தம் - கணபதியப்புலம், கோப்பாய் வடக்கு)

**கிசோபன்** (செல்லையா - சற்குணானந்தன் இருபாலை)

**ரசிக்** (சிறிபாலசுப்பிரமணியம் அன்பழகன் - நெல்லண்டை, பருத்தித்துறை)

இதே நடவடிக்கையின் போது கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**லெப். ரகீம்** (பொன்னுச்சாமி விஜயமுரளி கச்சாய் தெற்கு)

தெல்லிப்பளையில் சிறிலங்காப்படையினரின் உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரமரணமெய்திய

**ரகு** (கந்தசாமி ரகு - அளவெட்டி மத்தி)

உரும்பிராய், மல்லாகம் ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுமி மற்றும் இரு தமிழ்ப் பெண்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3343)

※ சிந்தனைக்கு ※

மேன்மையை நாடிச் செல்பவனுக்குச் சிறு குன்றுகள் உறுத்தாது.

-- யொஹன் லேவேட்டர்



ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 18-10-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208

த.பெ. எண் 05


## 'துக்ளக்கை' ஞாபகமூட்டும் சிறிலங்கா ஜனாதிபதி

பதினாறு அமைச்சுக்களின் பொறுப்புக்களை 45 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பகிர்ந்தளிப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கடந்த செவ்வாய் அன்று ஜனாதிபதிச் செயலகத்தில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் விசேட கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்தும் முகமாக அமைச்சர்களுக்கு உதவுவதற்கென 45 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதாக சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துக்கொண்டிருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அதிருப்தியாளர்களைச் சமாளிக்கவும், மேலும் பலர் ஐ. தே. கட்சியில் இருந்து விலகிச் செல்வதைத் தடுக்கவுமே திரு. பிரேமதாசா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்பதே உண்மையாகும்.

அரசியல் குற்றப்பிரேரணை நிராகரிக்கப்பட்டமை, ஆளும் ஐ. தே. கட்சி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வலுவிழந்து போனவை என்பன திரு. பிரேமதாசாவிற்கு கிடைத்த வெற்றியாக இருப்பினும் அவருக்கு பலத்த அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளதோடு தனது கொள்கைக்கோ, எண்ணங்களுக்கோ ஏற்ப அரசியல் நடத்தாமல் தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அரசியல் நடத்துவதில் அவர் ஈடுபட்டு விட்டதைத் தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது. தமது பதவிக்கு உடனடி அச்சுறுத்தலாக வரக்கூடிய இராணுவத்தினரையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் திருப்திப் படுத்துவதில் அவர் தீவிர கவனத்தை தற்

## தூதுவர் கடத்தலுடன் பாக். நேரடித் தொடர்பு

- அகாலிதள் தலைவர் குற்றச்சாட்டு

(டில்லி)

கடத்திச் செல்லப்பட்ட ருமேனிய ராஜதந்திரியின் மனைவி கதரீனா தனது கணவர் விரைவிலேயே விடுதலை செய்யப்படுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை ருமேனியராஜதந்திரி கடத்தலிலும், வேறு நாசவேலைகளிலும் பாகிஸ்தான் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக அகாலி தள் தராசிங் பிரிவின் தலைவர் ஜத்திகார் பஸ்வார் சிங் குற்றம் சாட்டியுள்ளார். அவர் நேற்று முன்தினம் செய்தியாளருடன் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

## அமெரிக்கா பிரிட்டனுக்கு யுனெஸ்கோவில் சேர பிரான்ஸ் அழைப்பு

(பாரிஸ்)

"யுனெஸ்கோ" நிறுவனத்தில் மீண்டும் சேர்ந்து கொள்ளுமாறு அமெரிக்காவையும், பிரித்தானியாவையும் பிரான்சிய ஜனாதிபதி மித்ரோன் கேட்டுள்ளார்.

அமெரிக்காவும். பிரித்தானியாவும் இந்த நிறுவனத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு விலகியிருந்தன. யுனெஸ்கோ நிறுவனத்தின் முகாமைத்துவம் மேற்கு நாடுகளுக்கு பாதகமாக இருப்பதால் அந்த நிறுவனத்திலிருந்து விலகுவதாக அவை தெரிவித்திருந்தன.

ஆனால் யுனெஸ்கோவின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டுள்ளதனால் மீண்டும் இந்த இருநாடுகளையும் இணையுமாறு மித்ரோன் கேட்டுள்ளார்.

## புலிகள் ஆதரவாளர் மீது நடவடிக்கை எடுக்கவும்

- வாழப்பாடி

(சென்னை)

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களை தேசிய பாது காப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் மாநில அரசின் தீவிர நடவடிக்கைகளால் விடுதலைப்புலிகள் ஒடுக்கப் பட்டுள்ளனர் என்றபோதிலும் அவர்களின் ஆதரவாளர்கள் இன்னமும் தீவிரமாக இருப்பதாகவும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் எனவு வலியுறுத்தினார்.

## கச்சதீவு விவகாரம் தமிழக அரசின் தீர்மானம் மத். அரசின் பரிசீலனையில்

(சென்னை)

கச்சதீவு விவகாரம்தொடர் ... டம் பேசிய மத்திய சட்டத் துறை இணையமைச்சர் ரங்க

## மத்திய கிழக்கு சமாதான மாநாட்டை ஆதரிக்க வேண்டும்

-- மன்னர் ஹுசெய்ன்

(அம்மான்)

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டை ஆதரிக்க வேண்டுமென ஜோர்தானிய மன்னர் ஹுசெய்ன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு உள்நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க முயலும் ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் தாம் சிம்மாசனத்தைத் துறக்க எண்ணியிருப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

அத்துடன் ஜோர்டான் நிலைத்திருக்க வேண்டுமானால் மத்திய கிழக்குசமாதான மாநாட்டை ஆதரிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

உத்தரவாதம் இல்லாத நிலையிலும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் கலந்து கொள்வது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்ற சர்வதேச நிர்ப்பந்தத்தை அதிகரிக்கச் செய்யும் எனவும் ஆகவே எமது மக்களைப் பாதுகாக்க நம் மாநாட்டில் கலந்து கொள்வோம் எனவும் ஹுசெய்ன் தெரிவித்தார்.

## ஸ்ரீ. ல. சு. க. பொ. செயலாளர் சூரிய பெருமாவை விலக்க சிறிமாவோ முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் சூரிய பெருமாவை பதவியிலிருந்து நீக்குவதற்கு அக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநயக்கா முயன்று வருகின்றார் என கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் அரசியல் மாற்றத்தை ஜே. ஆர். சூரிய பெருமா பின்பற்றமாட்டார் என சிறிமாவோ பண்டாரநாயக்கா அச்சம் கொண்டுள்ளதால் அவரைநீக்கிவிட்டு தனது உறவினரான அநுரத்த ரத்வத்தையை செயலாளராக நியமிக்க அவர் விரும்புகின்றார் என்றும், இதற்காகவே இக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் அவசரமாகக் கூடுகின்றது என்றும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 16 அமைச்சுப் பொறுப்பு 45 எம். பிக்களிடம் பகிர்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் பதினாறு அமைச்சு வேலைகளை கண்காணிக்க 45 பாராளுமன்ற உறுப்பினர்கள் தொண்டர் அடிப்படையில் செயற்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதினாறு அமைச்சுக்களின் உற்பத்தி, அபிவிருத்தி வேலைகளின் அமுலாக்கத்தை கண்காணிக்கும் பொருட்டு ... ளது.

அமைச்சுக்களில் பதவி வகிக்காத இந்த எம். பிக்கள் அமைச்சுக்களின் கீழ் செயற்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிருப்தியாளர்கள் கட்சியின் சேராத எம். பிக்களுக்கு அமைச்சர் அந்தஸ்துள்ள பொறுப்புக்கள் வழங்கப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா முடிவு

பொழுது செலுத்திவருகின்றார்.

லலித், காமினி ஆகிய அதிருப்தியாளர்களும், எதிர்க் கட்சியினரும் வைத்த, புலிகளுக்கு ஜனாதிபதி ஆயுதம் வழங்கினார் என்ற பிரதான குற்றச் சாட்டால் இராணுவத்தினரின் மத்தியில் தனக்கு எதிரான கருத்துக்கள் எழுவதைத் தடுப்பதில் பிரேமதாசா மிகுந்த அக்கறையாக உள்ளார். அண்மையில், பனா கொடை இராணுவ தலைமையக விடுதி முகாமில் உரையாற்றிய பிரேமதாசா இராணுவத்தினருக்கு என்றுமில்லாதவாறு பெரும் புகழாரம் சூட்டினார். அதே வேளை, அடுத்த வருட செலவீட்டில் பெரும் தொகை ஒன்றையும் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு ஒதுக்கவும் ஏற்பாடு செய்துள்ளார். அத்தோடு இராணுவத்தினரின் சகல செயற்பாட்டிற்கும் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

இதே போன்றே பாராளுமன்ற உறுப்பினர் விவகாரத்தில் திரு. பிரேமதாசா அக்கறையாகவுள்ளார். ஐ. தே. கட்சியில் தற்பொழுது 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மையில் பிளவு ஏற்படு முன்னர் 77 அமைச்சுப் பதவிகள் இருந்தன. மிதமாக சுமார் 45 பாராளுமன்ற உறுப்பினர்களே அமைச்சுப் பொறுப்புக்கள் இல்லாமல் இருந்தனர். தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதியின் நடவடிக்கையினால் ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதோ ஒருவகையில் அமைச்சுப் பொறுப்புள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளனர் இவ் அதிகாரப் பகிர்வின் மூலம் பாராளுமன்ற உறுப்பினரைத் திருப்திப் படுத்திவிடலாம் என பிரேமதாசா கருதுகின்றார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இந் நடவடிக்கை தென்னிந்திய தமிழ் நகைச் சுவை நடிகரான 'சோவின்' நாடகமான துக்ளக்கில் தன்னைப் பிரதம மந்திரியாகவும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள்சகலரையும் துணைப் பிரதம மந்திரிகளாகவும் நியமிக்கும் துக்ளக் பாத்திரத்தையே ஞாபகமூட்டுவதாகவுள்ளது. மறுவகையாகக் கூறின், சோ போன்ற அதிருப்தி அரசியல்வாதிகளுடன் இணைந்து சிந்திக்க வைக்கும் அளவிற்கு சிறிலங்கா ஜனாதிபதியின் செயற்பாட்டை அரசியல் நெருக்கடி மாற்றியுள்ளது எனலாம்.

மாக தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தீர்மானம் பல முக்கிய விவகாரங்களை எழுப்பியிருக்கிறது. இவ்வாறுசென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களி ராஜன் குமாரமங்கலம் தெரிவித்தார். அவர்மேலும் பேசுகையில் இத்தீர்மானம்குறித்து மத்திய அரசுபரிசீலித்து வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## ஹராரேயில்கொமன் வெல்த் 11 ஆவது உச்சி மாநாடு

(ஹராரே)

சிம்பாவே தலைநகர் ஹராரேயில் நேற்று 11 ஆவது பொது நலவாய நாடுகள் உச்சி மாநாடு தொடங்கியது.

தென் ஆபிரிக்காவில் சமாதானத்தை நிலை நாட்டும் முயற்சிகளில் ஈடுபடுமாறு மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய சிம்பாவே நாட்டின் ஜனாதிபதி றொபேட் முகாப்ப வேண்டுகோள் விடுத்தார்.

கருத்து வேற்றுமைகளைக் களைந்து விட்டு சுதந்திர தென் ஆபிரிக்காவை ஏற்படுத்த முயற்சிகளை எடுக்குமாறு தென்னாபிரிக்க தலைவர்களை முகாபே கேட்டுக்கொண்டார் உலகஅரங்கில்சட்டப்படியான ஆட்சியை ஏற்புடையதாக்க பொதுநலவாயம் உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சட்டமுறை ஆட்சியையும், ஜனநாயக வழிமுறையையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பதை பொதுநலவாயம் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று இங்கிலாந்துப் பிரதமர் ஜோன் மேஜர் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

## இந்தியா - சிறிலங்கா கூட்டு பொருளாதார திட்டம்

(கொழும்பு)

இந்தியாவும் சிறிலங்காவும் பொருளாதார கூட்டுவேலைத் திட்டம் ஒன்றை அடுத்த நான்கு மாதங்களில் திட்டமிடுவதென இணங்கிக் கொண்டுள்ளன. இத்தகவலை இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ளது. இத்திட்டம் தேயிலை விற்பனையின் உறுதித்தன்மையை பேண உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிதி நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புகளை வளர்க்கவும் இறாலைப் உற்பத்திப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் தயாரிப்பு புடைவை கைத்தொழில் தொடர்பான விடயங்களும் இவ் வேலைத்திட்டத்தின் கவனத்திற்கு எடுக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தில் முதலீடு செய்யவிரும்பும் இந்திய நிறுவனங்களின் பட்டியல் சிறிலங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில பல்வேறு துறைகளுக்கும் இக் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

45 அரசாங்க எம். பி. களுக்கும் பிரித்து அளிக்கப்பட்டுள் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முரண்பாடில்லாத வெ. உ. கொள்கையை வகுக்க பிரான்ஸ், ஜேர்மனி தீர்மானம்

(பாரிஸ்)

பிரான்சும் ஜெர்மனியும் இணைந்து முரண்பாடில்லாத ஒரே சீரான வெளியுறவுக் கொள்கையை வகுக்கத் தீர்மானித்துள்ளன. இத்திட்டம் இவ்வாண்டு இறுதியில் நடைமுறைக்கு வரவுள்ளது.

ஜெர்மனிய ஜனாதிபதி ஹெமமேற்கோலும்,பிரான்ஸ் ஜனாதிபதி மித்தரொக்கும் இத்திட்டத்தை நிறைவேற்றச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா, அமெரிக்கா மற்றும் நாடுகளுடனான இந்த நாடுகளுடைய அணுகுமுறை இப் புதிய திட்டத்தின்படி ஒரே தன்மையுடையதாக அமையவுள்ளது.

இதேவேளை இரு நாடுகளும் ஒருங்கிணைந்து ஒரு கூட்டு ஐரோப்பிய இராணுவத்தையும் அமைக்கவுள்ளன.

## தாதிமாருக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

தாதிமார்களுக்கு கணிசமான அளவு சம்பள உயர்வு விரைவில் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார மகளிர் விவகார அமைச்சர் றேணுகா ஹேரத் அமைச்சரவையில் விரைவில் சிபாரிசு செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சில குளங்களை புனரமைக்க போறாட் நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள குளங்கள் சில புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி புனரமைப்பு வேலைகளுக்கு போறாட் நிறுவனமும் உணவு உதவி வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது கண்காணிப்பில் உள்ள பருத்தித்துறை, சங்கானை பகுதிகளில் உள்ள குளங்களை புனரமைப்பு செய்வதற்கே போறாட் நிறுவனம் உணவு உதவு வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமான கூட்டம் நேற்று முன்தினம் யாழ் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ் குடா நாட்டில் பல குளங்கள் தூர்ந்து, அசுத்தம் அடைந்து காணப்படுகின்றமை தெரிந்ததே.

(தி)

# பாக். ராணுவத்தை சிவில் உடையில் இந்தியாவிற்குள் அனுப்ப முயற்சி

## பாக்கிஸ்தான் மீது சரத்பவார் குற்றச்சாட்டு

(டில்லி)

பயிற்சி அளிக்கப்பட்ட காஷ்மீரிய இளைஞர்களுடன் பொதுமக்கள் உடையில் பாகிஸ்தானிய இராணுவத்தினரையும், ஆப்கானிஸ்தான் அதிகாரிகளையும் இந்தியாவிற்குள் அனுப்பப் பாகிஸ்தான் முயற்சிக்கிறது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

இதனை நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்ற பேரணியொன்றில் பேசிய சரத் பவார் குறிப்பிட்டார்.

பனிப்பொழிவு தொடங்கும் முன்பு மேலும் பல தீவிரவாதிகளை அனுப்புவதற்குப் பாகிஸ்தான் முயலும் என்பதால் கண்காணிப்புப் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது என்றும் எல்லையைக் கடந்துவரும் எவரையும் சுடுமாறு இராணுவத்தினருக்கு உறுதியான உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் சரத் பவார் தனது உரையில் குறிப்பிட்டார்.

நாம் அமைதியை விரும்பும் ஒரு நாடு என்றபோதிலும், பாகிஸ்தான் தனது முயற்சியில் வெற்றிபெறுவதற்கு ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்றும் சரத்பவார் தெரிவித்தார்.

### கொக்கு தொடுவாயில்

பட்ட மோதலில் இருபத்திரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் முப்பத்திமூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்களில் மூவர் அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்கள் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை முப்பதிற்கும் அதிகம் என்றும் எழுபதைத் திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இருவர்

இராணுவத்தினரில் இருவர் மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமிற்குள் சென்றனர்.

மீண்டும் சிறிதுநேரம் தாமதித்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### மணலாற்றில்

வேளை கடற்படை பீரங்கி படகிலிருந்தும் இப்பகுதிகளைநோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தாக்குதல்களால் பல பொதுமக்களின் வீடுகளும் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதேவேளை கடந்தமாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதி மக்கள் வெளியேறி வேறு இடங்களில் தஞ்சமடைந்திருப்பது தெரிந்ததே. இதனால் பல உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

### ஏ. கே, எல். எம். ஜிகள்

| | | |
|---|---|---|
| ★ | ஐ. எம். ரவை விங்குடன் | - 402 |
| ★ | தேட்டோ ரவை விங்குடன் | - 234 |
| ★ | ஆர். பி. ஜி ஷெல் | - 01 |
| ★ | புரப்பர் | - 01 |
| ★ | தொலைத்தொடர்பு சாதனம் | - 01 |

ஆகிய ஆயுதங்களே கைப்பற்றப்பட்டவையாகும்.

### சிங்கபுரவில்

ரோந்து சென்ற இராணுவத்தினருடன் எதிர்பாரா விதமாக ஏற்பட்ட மோதலின் போதே இரண்டு இராணுவத்தினர் கொல்லப்

### மேஜர் டிசான்

தம்பிராஜன், வாழைச்சேனை),

★ லெப். கோவலன் (சின்னத்தம்பி மனோகரன், மன்னம்பிட்டி, மட்டக்களப்பு)

★ கிறிஸ்ரி (கிங்வேல் சிவகுமார், புல்லுமலை மட்டக்களப்பு),

★ சந்துரு (கணபதிப்பிள்ளை குலேந்திரன், தம்புலுவில் அம்பாறை),

★ லெப். வசந்தன் (நடராசா ரவீந்திரன், மன்னார்வீதி, வவுனியா),

★ 2ம் லெப். நிசாந்தன் (நாகநாதன் புலேந்திரன் பாண்டியன்குளம், வவுனிக்குளம்)

★ 2ம் லெப் சாண்டிறி (அந். தோணி சந்திரதாஸ் பெரிய உப்போடை மட்டக்களப்பு),

★ லெப். நீலன் (மயில்வாகனம் சேதுலிங்கம், புதுவளவு வல்வெட்டித்துறை),

★ மதின் (தியாகராசா தமிழரசா, கனுதாவளை களுவாஞ்சிக்குடி),

★ காசிம் (அப்புத்துரை பத்மநாதன், தாளையடி தெற்கு டண்டத்தரிப்பு)

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### 2 லட்சம்

களிலும் கால்நடையாகவும் பெட்டிகள் சிறு கைப்பைகள் குழந்தைகளுடன் சிறுவர்கள் யுவதிகள், முதியவர்கள் தென்மராட்சியையும் வலிகாமப்

## செஞ்சிலுவை சங்கத்தவர் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவும் முகமாக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்களையும் தொண்டர்களையும் இன்று வெள்ளி மாலை 2 மணிக்கு அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு அதன் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார் (உ)

## இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழா முன்னர் அறிவித்தபடி இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

யாழ். ஆயர் அதி வண. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தென் இந்திய திருச்சபையின் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி. டி. அம்பலவாணர் பரிசில்களை வழங்குவார்.

### பதில் பாதுகாப்பு

பெர்ணாண்டோ, உட்பட மற்றும் பல அதிகாரிகளும் சென்றிருந்தனர். மாலையில் கொழும்பு திரும்பிய இக் குழுவினர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியுள்ளனர்.

### சிறிலங்கா

நண்பகல்வேளையில் இவர்கள் எண்மரும் நீந்திக்கரைசேர்ந்தனர். இவர்களில் படுகாயமடைந்த தம்பிமுத்து என்ற வயோதிபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

### அதிருப்தியாளர்

ளக் கூடாது என அறிவிக்

உத்தரப் பிரதேசத்தில்

## குண்டுவெடிப்பிற்கு ஐம்பது இந்துக்கள் பலி

(டில்லி)

வட இந்திய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் இரண்டு குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன. இக் குண்டு வெடிப்புக்களில் ஐம்பதிற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களில் அநேகர் சிறுவர்களும், பெண்களுமாவர்.

சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமான இந்துக்கள் கூடியிருக்க 'ராம் லீலா' என்னும் இராமாயணக் காட்சிகள் நிறைந்த இந்துமத நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் முதல் குண்டு வெடிப்பு ஏற்பட்டது.

இதன்பின் இருபது நிமிடங்களில் அடுத்த குண்டுவெடிப்பு வைத்தியசாலை ஒன்றுக்குச் சமீபமாக இடம்பெற்றது. இக்குண்டு வெடிப்புக்களுக்குச் சீக்கியத் தீவிரவாதிகள் காரணமாக இருக்கக்கூடுமென்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகள்

## நிலவரம் அவதானித்தே பிரிட்டன், கனடா உதவுமாம்

(நியூயோர்க்)

நாடுகளுக்கு உதவி வழங்கும்போது அவற்றின் மனித உரிமைகள் நிலவரங்களை கூடுதலான அளவிற்கு உதவிகளுடன் தொடர்பு படுத்திப் பார்க்கப் போவதாக பொது நல அரசுகள் சில அறிவித்துள்ளன.

குறிப்பாக இது குறித்து கூடிய உதவிகளை வழங்கி வரும் கனடாவும், பிரித்தானியாவும் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த நிபந்தனையை வலியுறுத்தியுள்ளன.

ஆசிரியர் ஊக்குவிப்பு கொடுப்பனவு

## ஐந்து கல்வி கோட்டங்கள் கணக்கு சமர்ப்பிக்கவில்லை

(நல்லூர்)

1988-89 காலப்பகுதியில் ஆசிரியர் ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவு தொடர்பாக வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தைத் தவிர மற்ற ஐந்து கோட்டங்களும் தமக்குத்தேவையான கட்டுநிதியைக் கோரிக் கணக்கு வழக்குகளை யாழ். கல்வித்திணைக்களத்திற்கு இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

நடப்பு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுநிதிகோரி மாகாணசபைக்கு விண்ணப்பிக்காவிட்டால் ஊக்குவிப்புக் கொடுப்பனவை மாகாண

படி வேலைகள் இப்போது முடிக்கிவிடப் பட்டுள்ளன

இதேவேளை கல்வித் திணைக்கள ஊழியர்களின் கொடுப்பனவுக் கணக்குகள் முடிவடைந்து ஊக்குவிப்புப் பணம் அவர்களுக்கு வழங்கப் படும் நிலையில் உள்ளதாம்.

### இந்தியச்

விசாரணைக்குட்படுத்தப்பட்டபின் அவரை எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தினர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இறந்த இராணுவத்தினரின் உடல்களையும் தூக்கிக் கொண்டு இராணுவம் பின் வாங்கிச் சென்றது.

வத்தினர் கொல்லப் பட்டனர். இதனைத் தொடர்ந்து இந்த இராணுவத்தின் மின் உபகரணங்களில் சில விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பட்டப்படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும் 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுகம் நிகழ்ச்சியும் 1991.10 22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளன. வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள். இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன.

முதல் அமர்வு- முதற்கலை மாணவர்கள்

காலை 9.00 - காலை 11.00

இரண்டாவது அமர்வு- முதல் வர்த்தக மாணவர்கள் காலை 11.30 - 1.00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20.10 91 வெளிவாரிப்பதிவு பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(B/3338)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" மணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மராட்சியையும் வலிகாமப் பகுதிகளையும் நோக்கி விரைந்து வந்தனர்.

இவர்கள் தற்போது கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம், மகாஜனா வித்தியாலயம் சிவன்கோவில் புத்தூர் சிறீ சோமஸ்கந்த கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ளனர்.

யாழ். அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பல பாடசாலைகளிலும் கோவில்களிலும், பழைய முகாம்களிலும் ஆயிரக்கணக்கானோர் தங்கியுள்ளதுடன் பெரும்பாலானோர் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும், வீதியோரங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ, அ)

### நிவாரண

தாகவும் நேற்றுக்காலை யாழ். அரசாங்க அதிபர் கொழும்பிற்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். னார்.

இதற்குப் பதிலாகவே மேற்கண்ட தகவல் அரச தரப்பிலிருந்து சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அரசாங்க அதிபருக்கு நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் புதிய அகதி முகாம்களை அமைக்கும் உரிமை அரசாங்க அதிபருக்கு இடையாது. அவர் அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பின்பே அமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

லக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பில் நடைபெற்ற இக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் செயற்குழுவின் கட்டுப்பாட்டை மீறி அக்கூட்டத்தில் பங்கு கொள்வோர்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயதிலக்க சமரவீர பண்டார ஆகியோரிடமும் செயற்குழு விளக்கம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அ. சார்பற்ற

அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட அவசர கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டது.

இதன்பின் அரசாங்க தரப்பிலிருந்து இடைக்கும் பதிலை தொடர்ந்து அடுத்த நடவடிக்கை பற்றி தீர்மானிக்கப் படஉள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

### பலாலியில்

டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள பாதுகாப்புப் படையினர் மற்றும் இராணுவத்தினருக்கு ஆசிவேண்டி இது விசேடமாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. மகாவிகாரைய வெல்லஸ்ஸிய தேரர் இங்கு அனுசாசன உரை நிகழ்த்தினார். சிறிலங்கா இராணுவத்தின் யாழ்ப்பாணத் தளபதி பிரிகேடியர்விஜய விமலரட்னா பலாலி இராணுவ ஆலயத்தின் வளவில் வெள்ளரச மரம் ஒன்றையும் நாட்டினார்.

பகைசாவட்டாரம் ஊக்குவிப்பு கொடுப்பனவை மாகாண சபை அனுப்புவதில் தாமத மேற்படலாம் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் தமது கோட்ட ஆசிரியர்களுக்குத்தேவையான கட்டுநிதிக்கணக்குகளை சமர்ப்பிக்குமாறு யாழ் கல்வித் திணைக்கள கணக்குப்பகுதி அறிவுறுத்தல் கடிதங்களை சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேலும் காலம் தாழ்த்திய நடவடிக்கையாக கல்வித் திணைக்கள எழுதுவினைஞர்களுக்கு 40 மணித்தியால மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு வழங்கி மேற்

ரவு பிறப்பித்துள்ளது.

இது கூடுதலான ஒரு தண்டனை என்று புதுடில்லியில் உத்தியோக பூர்வவட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன

இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் பற்றியும் சிறிலங்கா தொடர்புச் சாதனங்கள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது குறித்து சிறிலங்கா அரசுடன் பேசிய இந்தியஉயர் ஸ்தானிகர் ஜா கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டாம் என்று அரசைக் கேட்டுள்ளார்.

இதே வேளை கொழும்பில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கமும் இது குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

அருட்திரு

பொனிபஸ் கொன்சால்வெஸ் அ.ம.தி

FR. Boniface Gonzalvez, O. M. I

அமல மரி தியாகிகள் சபையின் உறுப்பினரான கிபானிய நாட்டைச் சேர்ந்த, கடந்த 43 வருடங்களாக யாழ் - மன்னார் மாவட்டங்களில் இறைபணி புரிந்த அருட்திரு பொனிபஸ் கொன்சால்வெஸ் அ.ம.தி அடிகளார் மாட்றிட் நகரில் 10-10-91 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஜெபித்து அவரின் சிறந்த பணிக்காகவும், புனித வாழ்வுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூற யாழ். ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி யாழ் மரியாள் பேராலயத்தில் 23-10-91 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

அருட்திரு J. P. E. செல்வராசா
செயலர்

(R-1854)